மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : தலைவரவர்களே, பேரூர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் முழுவதும் அரிசன மக்கள் ஆவார்கள். ஏறத்தாழ அங்கே 2,000 மக்கள் தொகை கொண்ட அந்த அரிசன மக்கள் வசிக்கும் கிராமத்திற்கு இரண்டு மூன்று ஆண்டுக்காலமாகியும் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. விரைவில் அந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் அரிசன நல இலாக்காவின் மூலம் ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அரிசனங்கள் தற்பொழுது உபயோகித்து வரும் பேரூர் அக்ரஹாரம் கிணற்றை மேலும் அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும், ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது என்றும், அந்த நீரை அதற்கு எடுத்துச் சென்று அங்கிருந்து குழாய் மூலம் அரிசனப் பகுதிக்கு எடுத்துச் செல்லலாம் என்றும், அதற்கு தேவைப்படும் மதிப்பீட்டுச் செலவான ரூ. 40,000-இல் வேலை செய்யலாம். என்ற நிலை மாவட்ட ஆட்சியாளரின் கவனத்தில் இருக்கிறது.

திரு. பு. செ. முத்துச் செல்வன் : தலைவரவர்களே, அந்த அரிசன மக்களுக்கு அக்கிரஹாரத்திலுள்ள கிணற்றிலிருந்து செல்வதைவிட பக்கத்தி லுள்ள ஹேம்லெட்—பேரூரின் கிளை கிராமத்தில், பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள கிணற்றில் அதிகமாகத் தண்ணீர் கிடைக்கும் அளவில் இருக்கிறது. அதில் தண்ணீர் வற்றாமல் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுத்து அரிசன மக்களுக்குக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இதைத்தான் முன்பே குறிப்பிட்டேன். 40,000 ரூபாய் மதிப்பீட்டில் அங்கிருந்து ஒரு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கலாமா அல்லது 50,000 ரூபாய் மதிப் பீட்டில் அரிசனக் காலனியிலே குடிநீர்த் தொட்டி அமைக்கலாமா என்ற இந்த இரண்டையும் பரிசீலித்து வருகிறார்கள்.

*640 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில், ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என் இராசாங்கம் : செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப் பாக்கம் தொகுதி ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் கட்டப்பட்டுள்ளது.

1975 ஏப்ரல் 10]

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 1½ ஆண்டுக்காலமாக இயங்கவில்லை. இதற்குக் காரணம் அதைக் கட்டி முடித்த "ஒப்பந்தக்காரர் அதிலேயுள்ள பம்பு செட்டை எடுத்துக்கொண்டு சென்று விட்டார் என்ற காரணத்தால் அது இயங்கவில்லை என்று கூறப்படுகிறதே, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை மேற்கண்ட வினா மீது கோரப்பட்டது. அரிசன நல இலாகா மூலம் ஒரு தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப் பட்டிருக்கிறது என்றும், தேவையான குழாய்களும், பம்பு செட்டுகளும் வாங்கப்பட்டுள்ளன என்றும், மின்சாரத் தொடர்பு கிடைக்காததினால் வேலை முடங்கியிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். மின்சார வாரியத் துடன் தொடர்பு கொள்ளப்பட்டு சீக்கிரம் முடிக்கப்படும் என்றும் கூறி யுள்ளார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கட்டி முடிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்த பிறகு ஒப்பந்தக்காரர் எடுத்துச் சென்று விட்டார் என்று நான் சென்று பார்த்த பொழுது கூறினார்கள். அதுதான் உண்மை என்று கருதுகிறேன். எனவே மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அப்படியானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும், குறுகிய கால வினாக்களுக்கும் பதில் அளிப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதிமுறைகளின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் கள் சில அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் விதி 42-இன் கீழ் அல்லது விதி 41-இன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமும் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிக் குறுகிய கால கேள்விகளையும் அனுப்புகிறோம். நான் இப்படி விதி 41-இன கீழ் இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த